செ.வெ.எண்:52 நாள்:26.01.2015

**அரியலூர் மாவட்டம் சிறப்பு கிராமசபைக் கூட்டத்தில் நிதி ஆயுக் திட்டம் பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது சம்மந்தமான ஆய்வுக்கூட்டம்**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

அரியலூர் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் குடியரசு தின விழாவினை முன்னிட்டு, 26.01.2017 அன்று நடைபெறவுள்ள சிறப்பு கிராமசபைக் கூட்டத்தில் நிதி ஆயுக் திட்டம் பற்றி பொதுமக்களுக்கு விழிப்புணாவு ஏற்படுத்துவது சம்மந்தமான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தவைா் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (25.01.2017) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததவாது** :-

அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் குடியரசு தினவிழாவினை முன்னிட்டு 26.01.2017 அன்று கிராம சபைக் கூட்டத்தில் விவாதிக்க வேண்டிய பொருள்கள் தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் அனைத்துத் துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. அதில் அடுத்த 15 ஆண்டுகளுக்கான திட்டமிடல் தொடர்பாக கிராம அளவில் வேளாண்மை வளர்ச்சி, கல்வி, வேலைவாய்ப்பு உருவாக்கம், பொது சுகாதாரம், நகரமயமாதல் குறித்து மத்திய அரசின் நிதி அயோக் (National Institution Of Transforming India) வழிகாட்டலின்படி ஒவ்வொரு ஊராட்சிக்கும் தனித்தனியே திட்டம் தயாரிப்பு குறித்து ஆலோசிக்கப்பட்டது. ஒரு தேசம் ஒரு பார்வை" என்பதை கிராம சபையின் மூலம் மக்களுக்குத் தெரியப்படுத்துவது குறித்து ஆசேலாசிக்கப்பட்டது என மாவட்ட ஆட்சித்தவைா் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலா் திரு.ரெங்கராஜன், திட்ட இயக்குநா் ஊரக வளர்ச்சி முகமை திருமதி.யோகேஸ்வரி, உதவி இயக்குநா் ஊராட்சிகள் திருமதி.கங்காதாரணி மற்றும் அலுவலா்கள் கலந்துகொண்டனா்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலா், அரியலூர்.